பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

09 02 2025 **SUNDAY** **7.15 PM**

ஆகாஷவாணி
<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மணிப்பூர் முதலமைச்சர் திரு பைரேன் சிங், தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

2. வேளாண் வர்த்தகத்தில் ஈடுபட இளையோர் முன்வர வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் வலியுறுத்தியுள்ளார்.

3. உலக அளவில் அறிவியல் தொழில்நுட்பத்துறையில் இந்தியா தொடர்ந்து முன்னேற்றம் கண்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. மீன்வளத்தை பெருக்கும் வகையிலும், ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்குவிக்கும் வகையிலும் பட்ஜெட்டில் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

5. இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றிபெற 305 ரன் என்ற இலக்கினை இங்கிலாந்து நிர்ணயித்துள்ளது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

**<<<<<<>>>>**

மணிப்பூர் முதலமைச்சர் திரு பைரேன் சிங், தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

அம்மாநில ஆளுநர் திரு அஜய்குமார் பல்லாவை சந்தித்து, தமது ராஜினாமா கடிதத்தை இன்று அவர் வழங்கினார்.

ஆளுநரிடம் அவர் அளித்த ராஜினாமா கடிதத்தில், மணிப்பூர் மக்களுக்கு தேவையான திட்டங்களை செயல்படுத்த வாய்ப்பு தந்த மத்திய அரசுக்கு நன்றி தெரிவிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, தில்லியில், மத்திய அமைச்சர்கள் திரு அமித் ஷா, திரு ஜெ பி நட்டாவை சந்தித்துவிட்டு, இம்பால் திரும்பிய நிலையில், திரு பைரேன் சிங், தமது ராஜினாமா முடிவினை வெளியிட்டுள்ளார்.

**<<<<<<>>>>**

வேளாண் வர்த்தகத்தில் ஈடுபட இளையோர் முன்வர வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் வலியுறுத்தியுள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் **'Chittorgarh '**-ல் இன்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்று பேசிய அவர், பொருளாதார அளவில் விவசாயிகள் மேம்படும்போது நாடு மேலும் முன்னேற்றம் காணும் என்று கூறினார்.

நாட்டின் பொருளாதார திறனையும், அரசியல் ஸ்திரத்தன்மையையும் தீர்மானிப்பவர்களாக விவசாயிகள் திகழ்கின்றனர் என்றும், அவர்கள் சுயசார்புடையவர்களாக இருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

நாட்டின் முன்னேற்றப்பாதையில் விவசாயிகளின் பங்களிப்பினை குறைத்து மதிப்பிடக்கூடாது என்றும், அவர்களுக்கு தலைவணங்கும் வகையில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாகவும் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்தார்.

நாட்டில் 730 வேளாண் அறிவியல் மையங்கள் செயல்படுவதாகவும், விவசாயிகள் அங்குள்ள நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வேளாண் பொருட்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் தயாரிப்புகளுக்கு நல்ல வரவேற்பு கிடைத்து வருவதாக குறிப்பிட்ட திரு ஜெக்தீப் தங்கர், அது தொடர்பான வர்த்தகங்களில் விவசாயிகளும், அவர்களது குடும்பத்தை சேர்ந்த இளையோரும் அதிக அளவில் பங்கேற்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>

உலக அளவில் அறிவியல் தொழில்நுட்பத்துறையில் இந்தியா தொடர்ந்து முன்னேற்றம் கண்டு வருவதாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்று பேசிய அவர், **DNA** தடுப்பு மருந்து முதல், விண்வெளி தொழில்நுட்பம் வரை நாடு அடைந்துள்ள வெற்றிகளே அதற்கு சான்றாக விளங்குவதாக கூறினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு அறிவியலாளர்கள் மற்றும் விஞ்ஞானிகள் இடையறாது செயல்படும் வகையில், தொடர்ந்து ஊக்கம் அளித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

மருந்து தயாரிப்பில் இந்தியா முன்னணியில் உள்ளதாகவும், நவீன தொழில்நுட்பத்தோடு பாரம்பரிய மருத்துவ அறிவையும் பயன்படுத்துவதே அதற்கு காரணம் என்றும் திரு ஜிதேந்திர சிங் கூறினார்.

<<<<<<>>>>

உத்தரப்பிரதேச மாநிலம் கோரக்பூர் ரயில் நிலையத்தில் மத்திய ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

மாதிரி ரயில் நிலையமாக அது மாற்றப்பட்டு வருவது குறித்து ரயில்வே அதிகாரிகள் அமைச்சரிடம் எடுத்துரைத்தனர்.

இதையடுத்து, செய்தியாளர்களிடம் பேசிய திரு அஷ்வினி வைஷ்ணவ், மாதிரி ரயில் நிலையப்பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், கோரக்பூரின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்திற்கு ஏற்ப ரயில் நிலைய வடிவமைப்பு அமைந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>

சத்தீஸ்கர் மாநிலம் பிஜப்பூர் மாவட்ட வனப்பகுதியில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் 31 நக்சலைட்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இந்த தாக்குதலில் இரண்டு பாதுகாப்புப்படையினர் உயிரிழந்தனர். இரண்டு பேர் காயமடைந்தனர்.

பிஜப்பூர் மாவட்ட வனப்பகுதியில் அதிக அளவில் நக்சலைட்டுகள் நடமாட்டம் இருப்பதாக கிடைத்த உளவுத்தகவல்களின் அடிப்படையில் கூட்டுப்படையினர் அங்கு தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

உயிரிழந்த அனைத்து நக்சலைட்டுகளின் உடல்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், ஏராளமான ஆயுதங்கள், வெடிப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் காவல்துறை கூறியுள்ளது.

அப்பகுதியில் கூடுதல் படையினர் வரவழைக்கப்பட்டு, தேடுதல் நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதற்கிடையே, இந்த சண்டையில் உயிரிழந்த வீரர்களின் குடும்பத்தினருக்கு மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இரங்கல் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், அவர்களது வீரத்தை நாடு என்றும் நினைவில் கொண்டிருக்கும் என்று கூறியுள்ளார்.

அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் நாட்டில் நக்சலைட்டுகளின் செயல்பாடு முற்றிலுமாக முடிவுக்கு கொண்டுவரப்படும் என்று திரு அமித் ஷா குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>

மீன்வளத்தை பெருக்கும் வகையிலும், ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்குவிக்கும் வகையிலும் பட்ஜெட்டில் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், விவசாயம், சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில்கள், முதலீடு ஆகியவற்றை உள்ளடக்கியதாக மத்திய பட்ஜெட் அமைந்துள்ளது என்று கூறினார்.

உடான் திட்டத்தின்கீழ், புதிதாக 120 விமான நிலையங்கள் அமைக்கப்பட உள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - எல். முருகன் - 43 செகண்ட்ஸ்)*

**<<<<<<>>>>**

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள் . . . .

*(சவுண்ட் பைட் - **Song** – 8 நொடிகள்)*

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்றுவரும் மகா கும்பமேளாவையொட்டி, அப்பகுதியில் பல்வேறு நிகழ்ச்சிகள் மற்றும் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக, பிரயாக்ராஜில் வரும் 16-ஆம் தேதிமுதல், 18-ஆம் தேதிவரை சர்வதேச பறவைகள் விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பல்லுயிர் பெருக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் இந்த நிகழ்ச்சி நடத்தப்பட உள்ளது.

இதுபற்றி மேலும் தகவல்கள் அறிய 9 3 1 9 2 - 7 7 0 0 4 என்ற வாட்ஸ்அப் எண்ணை தொடர்புகொள்ளலாம் என்று உத்தரப்பிரதேச அரசு தெரிவித்துள்ளது.

மகா கும்பமேளாவில் இதுவரை 42 கோடிக்கும் மேற்பட்டோர் புனித நீராடியுள்ளதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.

*(சவுண்ட் பைட் - **Song** – 8 நொடிகள்)*

**<<<<<<>>>>**

கடற்படையை சேர்ந்த ஐ என் எஸ் **Tushi** கப்பல், கடந்த ஏழாம் தேதி **Seychelles** நாட்டின் போர்ட் விக்டோரியாவை சென்றடைந்தது.

இந்தியா - **Seychelles** நாடுகள் இடையேயான நட்புறவு மற்றும் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் ஒருபகுதியாக இந்த பயணம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கடற்படை தெரிவித்துள்ளது.

1976-ஆம் ஆண்டு அந்நாடு சுதந்திரம் அடைந்தது முதல், இதுபோன்ற பயணங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கடற்படை கூறியுள்ளது.

**<<<<<<>>>>**

ஜம்மு காஷ்மீரின் **Reasi** மாவட்டத்தில் வைஷ்ணவ் தேவி குகைக்கோயில் செல்லும் பாதையில் உள்ள கத்ரா பகுதியில் அசைவ உணவுகள், மதுபானங்கள் விற்பதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை மேலும் இரண்டு மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

பாரதிய நகரிக் சுரக்ஷா சங்கிதாவின் 163-ஆவது பிரிவின்கீழ், இந்த உத்தரவினை அம்மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

இதன்படி, கத்ரா முகாமிலிருந்து வைஷ்ணவ் தேவி குகைக்கோயில் வரை பக்தர்கள் செல்லும் 12 கிலோமீட்டர் பாதையிலும், அதையொட்டிய கிராமங்கள், சந்தைகள், ரயில் நிலையங்களை சுற்றியுள்ள பகுதிகளிலும் இந்த தடை தீவிரமாக கடைபிடிக்கப்படும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<<<>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 305 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பேட் செய்துவரும் இந்தியா சற்றுமுன்வரை 13 புள்ளி ஐந்து ஓவரில் விக்கெட் இழப்பின்றி 101 ரன் எடுத்துள்ளது.

கட்டாக்கில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த இங்கிலாந்து 49 புள்ளி ஐந்து ஓவரில் 304 ரன் எடுத்து ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக, ஜோ ரூட் 69 ரன் எடுத்தார்.

ரவீந்திர ஜடேஜா மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

--------------

துனிஷியாவில் நடைபெற்ற சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manas Dhamne** பட்டம் வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில அவர், 2-6, 6-0, 6-2 என்ற செட் கணக்கில், இத்தாலியின் **Lorenzo Carboni** –ஐ வென்றார்.

--------------

ஆசிய கோப்பை பாரா வில்வித்தை போட்டியில், இந்தியா இரண்டு தங்கப்பதக்கங்களை வென்றது.

தாய்லாந்தில் நடைபெற்றுவரும் இப்போட்டியின், ஆடவர் மற்றும் மகளிர் குழு பிரிவுகளில் இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது.

இப்போட்டியில இந்தியா இதுவரை 4 தங்கம், 2 வெள்ளிப் பதக்கங்களை வென்றுள்ளது.

---------------

விதர்பா அணிக்கு எதிரான ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டி காலிறுதி ஆட்டத்தின் இரண்டாம் நாளான இன்று ஆட்டநேர இறுதியில் தமிழக அணி முதல் இன்னிங்சில் 6 விக்கெட் இழப்பிற்கு 159 ரன் எடுத்துள்ளது.

நாக்பூரில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் விதர்பா அணி முதல் இன்னிங்சில் 353 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

-----------------

சீனாவில் நடைபெற்றுவரும் குளிர்கால ஆசிய விளையாட்டுப் போட்டிகளின், ஐஸ் ஹாக்கிப்பிரிவில் இந்தியா 4-2 என்ற கோல் கணக்கில் **Macau**–வை வென்றது.

இருப்பினும் இதர போட்டிகளில் தோல்வியடைந்ததன் மூலம் காலிறுதிக்கு முன்னேறும் வாய்ப்பினை இழந்தது.

------------

தில்லி ஓபன் டென்னிஸ் போட்டியின் முதலாவது தகுதி சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் **Aryan Sha** வெற்றிபெற்றார்.